1973 நவம்பர் 22]

சொன்னார்கள். ஆனால் என்னுடைய கேள்வி, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையைப் பற்றிய கேள்வி. எனவே அவர்கள் இன்னொரு அதிகமான வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். அந்தச் சாலையையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட அந்த கொள்ளிடக்கரையைப் பற்றியும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட கேள்வியை, மணல்மேட்டிலிருந்து இலுப்பப்பட்டு வழியாக பாப்பாக்குடி கொள்ளிடக்கரை வரை செல்லும் பாதையைப்பற்றி என்று கருதித்தான் அந்தப் பதிலைச் சொன்னேன். இதற்குத்தான் 70,000 ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் கேட்ட கேள்விபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தர முடியும். இதையே திரு. கிட்டப்பா அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம்-திருவாரூர் சாலை

*** 312 வினா—திரு. கு. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் சாலையினை நேராக அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் சாலை வளைந்து வளைந்து செல்கிறது. இதனால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. ஆகவே அந்தச் சாலையை நேராகப் போடுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வளர்ந்து வளர்ந்து செல்வதை நோக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய்க்கு மேலாகும் என்று கூறப்படுகிறது. இருந்தாலும் அரசு எடுத்திருக்கும் திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. நிதிநிலை சரியாகும்பொழுது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 313, 314, 315, 316 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

Intensive Agricultural Production in Thanjavur district

* 317. Q—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agrilutur**e** be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to step up Agriculture production in Thanjavur district during the calendar year 1973; and

(*b*) If so, the details thereof.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் செயலில் உள்ள மாவட்ட வேளாண்மை முனைப்புத் திட்டத்தின்கீழ், 1973-74-ல் 12,50,000 ஏக்கரில் நெல்லையும், (இவற்றில் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கரில் இருபோக விளைச்சல்), 50,000 ஏக்கரில் சிறு தானியங்களையும், 5,50,000 ஏக்கரில் பயறு வகைகளையும் விளைவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட திட்டங்கள் வேறு மாவட்டங்களிலும் அமல் நடத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வேறு மாவட்டங்கள் சிலவற்றில் இன்டென்சிவ் அக்ரிகல்சுரல் ஏரியா ப்ரோக்கிராம் அமல்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தச் சிறப்புத் திட்டத்தினால் எத்தனை டன் அதிகமான நெல் கிடைத்தது என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ? இந்தச் சிறப்புத்